<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 345/2022

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 10-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. இந்த வழக்கு சொத்து எனது பாட்டி முத்தம்மாள் வாங்கிய சொத்து என்றால் சரிதான். இந்த சொத்தை யார்யிடம் இருந்து வாங்கினேன் என்றால் தண்டமணி செண்டியாரிடம் இருந்து வாங்கினேன். சொத்தின் சர்வே எண்.476 என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி அதே தண்டமணி செண்டியாரிடம் இருந்த தான் கிரையம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அதும் சர்வே எண்.476 பூமிக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அவர் வாங்கிய சொத்தும் எனது பாட்டி வாங்கிய சொத்தும் ஒரே நாளின் வாங்கியது என்றால் ஆமாம். எனது பாட்டி வாங்கிய சொத்தின் ஆவண எண்னை இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் எண்.849/67 என்றால் சரிதான். ஆனால் 1ம் பிரதிவாதி வாங்கிய தேதியினை குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஆவண எண்னை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். அந்த ஆவணம் எண்.848/1967 என்றால் சரிதான்.

3. எனது பாட்டி வாங்குவதற்கு முன்பாகவே சென்னியப்ப கவுண்டர் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். தண்டமணி செட்டியாருக்கு எவ்வளவு சொத்து

இருந்தது என்பதை பற்றி ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இரண்டு ஆவணம் ஒரே நாளின் தான் கிரையம் செய்யப்பட்டது. அதன் விவரங்கள் எனக்கு சரியாக தெரியவில்லை. தண்டிமணி செட்டியாருக்கு ஏற்கனவே கிரையம் செய்த இடத்தை பொறுத்து மீண்டும் கிரையம் செய்ய உரிமையில்லை என்றால் சரிதான். ஒரே சர்வே எண்ணை நானும் பிரதிவாதியும் கிரையம் பெற்றுள்ள எல்லையை வரயரைத்துள்ளோம் என்றால் இல்லை கல் நாட்டி விவசாயம் செய்து வருகிறோம்.

4. பிரதிவாதி கீர்த்திக்காவின் சொத்து வடபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுடைய இடத்தில் கம்பி வேலி போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தற்சமயம் போட்டுள்ளார்கள். எங்களுடைய எல்லையில் கம்பி வேலி போடவில்லை என்றால் சரிதான். ஆட்சபணை இருந்ததால் போடவில்லை. இது சமந்தமாக என்னுடைய பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எந்த வடிவில் என்னை இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

5. என்னுடைய பூமியும் பிரதிவாதியின் பூமியும் நல்லூர் செல்லும் வழியில் தார் சாலைக்கு கிழக்கில் உள்ளது என்றால் சரிதான். அவருடைய பூமியில் இன்னோருவர் செல்ல அவசியம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய பூமியின் எல்லையை நிர்ணைக்க இந்நீதிமன்றத்தில் எதேனும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பூமியில் வடமேற்கு மூலையில் எத்தனை கழிப்பிடம் கட்டியுள்ளேன் என்றால் வடக்கு பார்த்து ஐந்தும் தெற்கு பார்த்து ஐந்தும் கட்டியுள்ளேன். இது பிரதிவாதியுடைய பூமியின் தென்மேற்கு மூலைக்கு அமைந்துள்ளது என்றால் சரிதான்.

6. ஏற்கனவே எங்களுக்குள் எல்லை பிரச்சனை இருந்தது அளந்து பார்க்காமலேயே கழிப்பிடம் கட்டியுள்ளோம் என்றால் இல்லை. கழிப்பிடம் 25 வருடங்களுக்கு முன்பாக அந்த இடத்தில் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. அத்துக்கல் சரியா தவறா என்பதை டிஜிட்டல் சர்வேயரை வைத்து அளந்தால் தெரியும் என்றால்

சரிதான். பிரதிவாதிகள் அந்த இடத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் மானவரியான பூமியில் தான் விவசாயம் செய்வார்கள் என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு என்னை இடையூறு செய்ய நோக்கம் இருந்தது என்றால் சரியல்ல. நான் வேண்டும் என்றே இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பூமியை அளந்து கொடுத்தால் எந்தவித பிரச்சைனையும் செய்வார்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.02.10 15:51:22 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.